………………………………………………………

உண்டளவே தோற்றான் உயிர்.

***விளக்கம்:***

கண்ணகியின் துன்பம் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மையணி ஆகும்.

***5. வேலொடு நின்றான் இடு என்றது போலும்***
***கோலொடு நின்றான் இரவு ? இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.***

இப்பாடலில் உவமையணி அமைந்துள்ளது.

அணி

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமையும், இடையில் வரும் உவம உருபு வெளிப்படையாக வரும்.

உவமை:

வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிபறி செய்தல்.

**உவமேயம்:**

**ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மன்னன் வரி விதித்தல்.**

**உவம உருபு:**

**போல விளக்கம்: வழிப்பறி செய்பவன் வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வான். அதுபோல ஓர் அரசன் தன் ஆட்சி** அதிகாரத்தைக் கொண்டு மக்களுக்கு அதிகமான வரியை விதிக்கிறான்.

| வினா எண்:38 | செய்யுள் நெடுவினா | பக்கம்:66,122,179,224 |
|---|---|---|

1. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

| வ.எண் | மருவூர்பாக்க வீதிகள் | வணிகவளாகங்கள் |
|---|---|---|
| 1 | அனைத்து பொருள்களும் கிடைத்தன. | இங்கேயும் அனைத்து பொருள்களும் கிடைக்கின்றன. |
| 2 | கடைத்தெருக்கள் இயற்கையான சூழலில் அமைந்தது. | அங்காடிகள் செயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது. |
| 3 | தெருக்களில் முத்து, மணி, பொன்னைக் குவித்து வைத்து விற்றனர். | பாதுகாப்பாக குளிரூட்டப்பட்ட கடைகளில் விற்கின்றனர் |
| 4 | உற்பத்தியாளரே விற்பனையாளர் | உற்பத்தியாளர் வேறு விற்பனையாளர் வேறு |
| 5 | இயற்கை நறுமணப் பொருள்களை விற்றனர். | செயற்கை நறுமணப் பொருள்களை விற்கின்றனர். |

2. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

- ❖ ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும்
- ❖ கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது.
- ❖ அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருக்கிறது.
- ❖ இன்றைய காலத்தில் மாணவர்களுக்கு அரசு தரும் நலத்திட்டங்களை
- ❖ ஆசிரியர்கள் பெற்றுத்தருகின்றனர்.
- ❖ (எ.கா) பாடநூல், பேருந்து பயணச்சீட்டு, மிதி வண்டி, கணினி போன்றவை.
- ❖ ஏழை எளிய மக்களுக்கு அரசின் நலத்திட்டங்களைப் பெற அரசு அலுவலர் உதவுதல்.
- ❖ (எ.கா) 1.மருத்துவக் காப்பீடு , 2. புயல் வெள்ள நிவாரண நிதி .


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


3. ***இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.***

- இடைக்காடனார் குசேல பாண்டியனிடம் சென்று கவிதை பாடினார்.
- மன்னன் தலை அசைக்காமல் அவமதித்தான்.
- புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
- இறைவன் மதுரையை விட்டு நீங்கினார்.
- மன்னன் இறைவனிடம் காரணம் கேட்டான்.
- புலவரை அவமதித்த தவறுக்கு வருந்தினான்.
- இறைவன் மீண்டும் மதுரைக்கு வந்தார்.

4. கருணையனின் தாய் மறைவுக்கு , வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற

- உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.
- மழை இல்லாப் பயிரைப் போல வாடுகிறேன்.
- மரத்திலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறேன்.
- அம்பினால் உண்டான புண்ணைப் போலவும், துணையைப் பிரிந்த பறவையைப்
- போலவும் வாடுகிறேன்.
- உய்முறை அறியேன், மெய்முறை அறியேன், உணவு செய்முறை அறியேன் என கவிதை மூலம் விவரிக்கின்றார்.

5. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

- கார்காலம் தொடங்கிவிட்டது. மேகம் வளமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, பெருமழை பொழிந்தது.
- முதுப்பெண்கள் முல்லைப் பூவுடன் நெல்லையும் சேர்த்து தூவி தெய்வத்தை தொழுதனர்.
- தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.
- ஆயர்குலப்பெண் பசியால் வாடிய பசுவின் கன்றிடம் இப்போது உன் தாய் வந்துவிடுவாள் வருந்தாதே என்று கூறினாள்.
- நற்சொல்லைக் கேட்ட முதுப்பெண்கள் தலைவியிடம் சென்று கூறினர்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| வினா எண்:39 | இயல் - 2 | புத்தக பக்கம்: 46 |
|---|---|---|

1. மாநில அளவில் நடைபெற்ற ``மரம் இயற்கையின் வரம்'' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

## நண்பனுக்கு வாழ்த்து மடல்

விழுப்புரம்,
01-06-2022.

அன்புள்ள நண்பா,

நான் இங்கு நலம். அது போல் அங்கு உன் நலம் அறிய ஆவல். ``மரம் இயற்கையின் வரம்'' என்னும் தலைப்பில் நடைப்பெற்ற கட்டுரைப் போட்டியில் நீ மாநிலத்தில் முதல் பரிசு பெற்றதை அறிந்து மகிழ்ந்தேன். அதற்காக உன்னை மனமார வாழ்த்துகிறேன். இதுபோல் நீ மேலும் பல பரிசுகள் பெற வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள நண்பன்,
த.தமிழன்.

உறைமேல் முகவரி

பெறுநர்
அ.தமிழரசன்,
5, பாரதி தெரு,
கம்பர் நகர்,
விழுப்புரம், 607 107.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| வினா எண்:39 | இயல் - 3 | புத்தக பக்கம்: 68 |
|---|---|---|

***2. உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் ஒன்று எழுதுக.***

| 39) | புகார் கடிதம் |
|---|---|
| அனுப்புநர் | |
| | த.தமிழ்ச்சி, |
| | 5,பாரதி தெரு, |
| | கம்பர் நகர், |
| | விழுப்புரம், |
| | 607107. |
| பெறுநர் | |
| | உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள், |
| | உணவு பாதுகாப்பு ஆணையம், |
| | விழுப்புரம். |
| | 607 107. |
| ஐயா, | |
| | பொருள் : தரமற்ற உணவு வழங்கிய உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுதல் சார்பு. |
| | ***வணக்கம்! நான் நேற்று மாலை விழுப்புரத்தில் உள்ள தென்றல் உணவு*** |
| ***விடுதியில் உணவு உண்டேன். அங்கு வழங்கப்பட்ட உணவு தரமற்றதாக இருந்தது. மீன்வறுவல் தரம் இல்லாததாக இருந்தது. விலையும் மிக அதிகமாக இருந்தது. விலை அதிகமாக இருந்த அந்த விடுதியின் இரசீது என்னிடம் உள்ளது. அதன் நகலை இத்துடன் இணைத்துள்ளேன். தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*** | |
| நன்றி ! | |
| | |
| ***இடம் : விழுப்புரம்,*** | ***இப்படிக்கு,*** |
| ***நாள் : 10-10-2022.*** | ***தங்கள் உண்மையுள்ள,*** |
| | ***த. தமிழ்ச்சி.*** |
| | |
| உறைமேல் முகவரி | |

| பெறுநர் |
|---|
| உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள், |
| உணவு பாதுகாப்பு ஆணையம், |
| விழுப்புரம். |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| வினா எண்:39 | இயல் - 7 | புத்தக பக்கம்: 180 |
|---|---|---|

| 39) | ***நாளிதழில் கட்டுரையை வெளியிட வேண்டி விண்ணப்பம்*** |
|---|---|
| அனுப்புநர் | |
| | த.தமிழச்சி, |
| | 5, பாரதி தெரு, |
| | கம்பர் நகர், |
| | விழுப்புரம், |
| | 607107. |
| பெறுநர் | |
| | ஆசிரியர் அவர்கள், |
| | விடியல் நாளிதழ், |
| | விழுப்புரம். |
| | 607 107. |
| ஐயா, | |
| | பொருள்: கட்டுரையை வெளியிட வேண்டுதல் சார்பு. |
| | |
| | ***வணக்கம்! தங்கள் நாளிதழின் சார்பாக பொங்கல் பண்டிகையை ஒட்டி*** |

***வெளியிடும் பொங்கல் மலருக்காக ``உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளேன். அக்கட்டுரையைத் தங்கள் அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளேன். தாங்கள் அக்கட்டுரையைத் தங்கள் நாளிதழ் சார்பாக வெளியிடும் பொங்கல் சிறப்பு மலரில் என்னுடைய கட்டுரையும் வெளியிடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.***

நன்றி !

***இடம்*** : ***விழுப்புரம்,*** ***இப்படிக்கு,***

***நாள்*** : *13-06-2022.* ***தங்கள் உண்மையுள்ள,***

த.தமிழச்சி.

உறைமேல் முகவரி


| பெறுநர் |
|---|
| ஆசிரியர் அவர்கள், |
| விடியல் நாளிதழ், |
| விழுப்புரம்,607 107. |



| வினா எண்:39 | இயல் - 8 | புத்தக பக்கம்: 199 |
|---|---|---|


***4. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால், இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின் வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.***

| 39) | ***மின்விளக்கு வசதி வேண்டி விண்ணப்பம்*** |
|---|---|
| அனுப்புநர் | |
| | த.தமிழச்சி, |
| | 5, பாரதி தெரு, |
| | கம்பர் நகர், |
| | விழுப்புரம், 607107. |
| | |
| பெறுநர் | |
| | மின்வாரிய அலுவலர் அவர்கள், |
| | மின்வாரிய அலுவலகம், |
| | விழுப்புரம், 607 107. |
| | |
| ஐயா, | |
| | பொருள்: மின்விளக்கு வசதி வேண்டுதல் சார்பு. |
| | |
| | ***வணக்கம்! எங்கள் ஊரில் நான்காயிரம் மக்கள் வாழ்கிறோம். நாங்கள்*** |
| ***மின்விளக்கு வசதி இல்லாமல் மிகவும் இன்னல் உறுகிறோம். எனவே எங்கள்*** | |
| ***ஊருக்கு மின்விளக்கு வசதி செய்துத்தர வேண்டுமாறு எங்கள் ஊர் மக்கள்*** | |
| ***சார்பில் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*** | |
| ***நன்றி !*** | |
| | |
| இடம் : விழுப்புரம், | ***இப்படிக்கு,*** |
| நாள் : 10-10-2022. | ***தங்கள் உண்மையுள்ள,*** |
| | த.தமிழச்சி. |
| | |
| உறைமேல் முகவரி | |
| பெறுநர் | |
| மின்வாரிய அலுவலர் அவர்கள், | |
| மின்வாரிய அலுவலகம், | |
| விழுப்புரம், 607 107. | |

| வினா எண்:40 | படம் உணர்த்தும் கருத்து | புத்தக பக்கம்: 23,47,68,74,97,125, 152,157, 201, 224, 229 |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 |  | ப.எண்: 23 | அறிவைப் பூட்டி வைக்காதே!<br>அறியாமை இருளில்<br>தலைகுனியாதே!<br>அறிவுப்பூட்டைத் திறந்திடு !<br>அறம் பொருள் இன்பம் கற்றிடு !<br>அவனியில் உயர்ந்து சிறந்திடு ! |
| 2 |  | ப.எண்: 47 | அடிமை நீங்க<br>அகிம்சை<br>சுமந்தோம் - நேற்று<br>அறியாமை அகல<br>புத்தகப்பை<br>சுமப்போம் - இன்று<br>நோய் நீங்கிட<br>இயற்கைக் காற்றைச்<br>சுமப்போம் - நாளை<br>மானிடா. |
| 3 |  | ப.எண்: 68 | வறுமையில் வாடிய<br>எனக்கு<br>ஒருநாள் கிடைத்தது நல்லுணவு....<br>உண்ணும் வேளையில் நீ<br>வந்தாய்... பசியால் இணைந்தோம்<br>பகிர்ந்து உண்ணலாம் வா! தோழா<br>வா!! |
| 4 |  | ப.எண்: 97 | பல<br>மாட்டிற்கு<br>மூக்கணாங்கயிறு போடும்<br>மானிடப் பிறவிகளே -<br>இதோ ...<br>உனக்கு<br>மூக்கணாங்கயிறு போட<br>வந்துவிட்டான்<br>திறன் பேசி நாயகன். |

| | | | |
|---|---|---|---|
| 5 |  | ப.எண்: 125 | மரங்கள் பூமியின் ஆடைகள்<br>உலகமே இங்கு சுடுகாடாச்சி<br>வெட்ட வெளியில் அமர்ந்து<br>படிக்கும்<br>அவல நிலைக்கும் காரணமாச்சு<br>பூமிப்பந்தின் வெப்பம் தணிக்க<br>வீட்டிற்கு ஒரு மரம் உடனே<br>நடுவோம். |
| 6 |  | ப.எண்: 152 | ஆடுவோம் மேள தாளத்தோடு<br>பாடுவோம் பம்பை<br>உடுக்கையோடு வண்ண<br>துணியசைத்து<br>வட்டமாய் ஆடுவோம்<br>எண்ணக் கருத்துகளை<br>எல்லோருக்கும் கூறுவோம். |
| 7 |  | ப.எண்: 182 | பசித்தவனுக்குப் பசியாற்ற<br>யாவர்க்கும் தேவாமிர்தமாம்<br>உணவைப் படைக்க<br>புறப்பட்டு விட்டான்,<br>அரை நிர்வாணத்தோடு …….. |
| 8 |  | ப.எண்: 201 | கொடுப்பீர் எனக்கேட்ட போது<br>கொடுப்பேன் எனக் கொடுத்த<br>போது<br>தடுப்பேன் எனத்தடை<br>போட்டால்<br>தருமம் எப்படித் தழைத்<br>தோங்கும்?<br>மானிடனே… |
| 9 |  | ப.எண்: 229 | தர்மம் செய்வது விளம்பரமல்ல<br>தாழ்ந்தோர் உயர்வு பெற<br>ஏழைகள் ஏற்றம் பெற<br>சுயப்படம் எடுத்து<br>வலைதளம் அனுப்பும்<br>வழக்கமே இன்று அறமா? |

| | | | |
|---|---|---|---|
| 10 |  | பட எண்: 148 | 1. கரகாட்டம் என்றால் என்ன ?<br>கரகம் என்னும் பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுதல்.<br>2. கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?<br>கரகம், கும்பம். |
| 11 |  | பட எண்: 181 | 1.பகைவர் நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு செல்கின்றனர்.<br>2. நால்வகைப் படைகளுள், முப்படைகள் மட்டுமே முன்னேறிச் செல்கின்றன.<br>3. நால்வகைப் படைகளுள், முப்படைகள் மட்டுமே முன்னேறிச் செல்கின்றன.<br>காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை மூன்றும் முன்னேறிச் சென்று வெற்றி வாகை சூடப் போகிறது. |
| 12 |  | பட எண்: 224 | நாள்தோறும் சுமக்கும் தலைச்சுமைதான்<br>தலைக்கனமே வாழ்வு - என்று<br>சித்தாளின் வாழ்வைக்<br>குறித்து நாகூர் ரூமி கூறுகிறார். |
| 13 |  | பட எண்: 74 | பதறுகிறது என் நெஞ்சமடி<br>வருங்கால சமுதாயம்<br>என்னவாகுமடி<br>எப்போது தீரும் செல்பி மோகமடி<br>"மூழ்கியவன் "<br>மூச்சு நின்னுப்போச்சு<br>மனிதநேயம் செத்துப்போச்சு |

| வினா எண்:41 | படிவம் நிரப்புக | இயல் - 5 | புத்தக பக்கம்: 124 |
|---|---|---|---|

**நூலக உறுப்பினர் படிவம்**

விழுப்புரம் மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / ~~கிளை / ஊர்ப்புற நூலக~~ம் - விழுப்புரம் மாவட்ட மைய நூலகம்

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

**அட்டை எண்** - **10** **உறுப்பினர் எண்** : 2030

1. **பெயர்** : த தமிழச்சி அ.தமிழரசன்
2. **தந்தை பெயர்** : அ.தமிழரசன்
3. **பிறந்த தேதி** : **10-10-2007**
4. **வயது** : **15**
5. **படிப்பு** : 10ம் வகுப்பு
6. **தொலைபேசி எண்** : **98765410**
7. **முகவரி** : 5, பாரதி தெரு,

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) கம்பர் நகர்,

விழுப்புரம் - 607107.

நான் **மாவட்ட மைய** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை **ரூ.100** சந்தா தொகை **ரூ.10** ஆக மொத்தம் **ரூ.110** ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

**இடம்** : **விழுப்புரம்** **தங்கள் உண்மையுள்ள ,**

**நாள்** : **10-09-2022.** **த.தமிழச்சி.**

திரு.திருமதி. செல்வி. செல்வன் த - தமிழச்சி அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

**அ.பாரதி,**

**தமிழாசிரியர்,**

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| வினா எண்:41 | படிவம் நிரப்புக | இயல் - 9 | புத்தக பக்கம்: 227 |
|---|---|---|---|

## மேல் நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : 1020 தேதி - **01-06-2022** வகுப்பும் பிரிவும் - 11- அ

1. மாணவ / மாணவியின் பெயர் : த - தமிழச்சி
2. பிறந்த தேதி : **17.02.2006**
3. தேசிய இனம் : இந்தியர்
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : த.தமிழரசன் - த.தமிழரசி
5. வீட்டு முகவரி : 5, பாரதி தெரு, கம்பர் நகர்,
   விழுப்புரம் - 607107.
6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ், ஆங்கிலம்
8- பெற்ற மதிப்பெண்கள் : 450/500
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு மேல் நிலைப் பள்ளி.
   விழுப்புரம் - 607 107.

| தேர்வின் பெயர் | பதிவு எண்/ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| பள்ளி இறுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு) | **972535 / 2022** | தமிழ் | **90** |
| | | ஆங்கிலம் | **90** |
| | | கணிதம் | **90** |
| | | அறிவியல் | **90** |
| | | சமூக அறிவியல் | **90** |
| | | மொத்தம் | **450** |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்
11. தாய்மொழி : தமிழ்
12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : பிரிவு எண் 103 / தமிழ் வழி

மாணவ / மாணவியர் கையொப்பம்,

த.தமிழச்சி / **01-06-2022.**


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

## 3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்ப படிவம்

| | | |
|---|---|---|
| 1. மாணவர் பெயர் | : | த.தமிழச்சி |
| 2. பாலினம் | : | பெண் |
| 3. பிறந்த தேதி | : | 01-01-2007 |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 7. பெற்றோர் பாதுகாவலர் பெயர் | : | அ. தமிழரசன் |
| 6. இரத்தவகை | : | பி+ |
| 7. உயரம் மற்றும் எடை | : | 120 செ.மீ / 40 கி.கி |
| 8. வீட்டு முகவரி | : | 5, பாரதி தெரு,<br>கம்பர் நகர்,<br>விழுப்புரம் - 607107. |
| 9. தொலைபேசி / அலைபேசி எண் | : | 9876543210 |
| 10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | 10ஆம் வகுப்பு |
| 11. பள்ளியின் முகவரி | : | அரசு மேல்நிலைப் பள்ளி,<br>விழுப்புரம். |
| 12. சேர விரும்பும் விளையாட்டு | : | கபடி |

சேர்க்கை எண் : 1234

மாணவர் கையெழுத்து

இடம் : விழுப்புரம்

த.தமிழச்சி

நாள் : 10-10-2022

பெற்றோர் பாதுகாவலர் கையெழுத்து

அ.தமிழரசன்

www.Padasalai.Net www.CBSEtips.in


### 4. தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப்பட்டியலை நிரப்புதல்

### தன் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | த.தமிழச்சி |
| 2. பாலினம் | : | பெண் |
| 3. பிறந்த தேதி மற்றும் வயது | : | 01-01-2007, 15 |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | தமிழரசன் |
| 6. வீட்டு முகவரி<br>(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | 5, பாரதி தெரு,<br>கம்பர் நகர்,<br>விழுப்புரம்,<br>607107. |
| 7. தொலைபேசி / அலைபேசி எண் | : | 9876543210 |
| 8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் | : | 450/500 |
| 9. தாய் மொழி | : | தமிழ் |
| 10. பயின்ற மொழிகள் | : | தமிழ் / ஆங்கிலம் |
| 11. தட்டச்சு | : | தமிழ் / ஆங்கிலம். |
| 12. கணினி தகுதி | : | டி.சி.ஏ |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன். தங்கள் நிறுவணத்தில் தட்டச்சர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதி அளிக்கின்றேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

த.தமிழச்சி.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| வினா எண்:42 | நிற்க அதற்குத்தக... | புத்தக பக்கம்: 24 |
|---|---|---|

இயல் - 1

| இன்சொல் வழி | தீயசொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும்<br>அறம் வளரும்<br>புகழ் பெருகும்<br>நல்ல நண்பர்கள் சேருவர்<br>அன்பு நிறையும் | பிறர் மனம் வாடும்<br>அறம் தேயும்<br>இகழ் பெருகும்<br>நல்ல நண்பர்கள் விலகுவர்<br>பகைமைநிறையும் |

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக்குக் காட்டும் வழி யாது?

1. நாங்கள் இன்சொல் வழியையே பின்பற்றுவோம்.
2. எங்கள் நண்பருக்கும் அவ்வழியையே காட்டுவோம்
3. அவர்களையும் அவ்வழியின் படி நடக்கச் செய்வோம்.

| வினா எண்:42 | இயல் 2 | புத்தக பக்கம்: 48 |
|---|---|---|

**வானொலி அறிவிப்பு**

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கெ 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

| | |
|---|---|
| **புயலின் போது வெளியே செல்ல வேண்டாம்.** | **வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின் போதே வெளியேறவும்.** |
| **தொலைபேசி. மின்சாதனங்கள் பயன் படுத்துவதைத் தவிர்க்கவும்.** | **மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியிலேயே தங்கவும்.** |
| **வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும்.** | **காற்று அடிப்பது நின்றாலும் எதிர்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம்.** |
| **மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும்.** | **வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும். மரங்கள் மின்கம்பிப் பாதைகள். நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியுமம் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும்.** |

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

1. **புயலின் போது வெளியே செல்ல மாட்டேன்.**
2. **தொலைபேசி மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பேன்.**
3. **மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியிலேயே குடும்பத்தினரோடு தங்குவேன்.**
4. **வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றுவேன்.**

| வினா எண்:42 | இயல் - 3 | புத்தக பக்கம்: 69 |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **தம்பி,,,, உனக்குப் பிடிச்ச காய் சொல்லு?** | - | **கேரட்** |
| **பிடிச்ச பழம் ?** | - | **ஆப்பிள்** |
| **பிடிச்ச காலை உணவு?** | - | **நூடுல்ஸ்** |
| **மத்தியானத்துக்கு?** | - | **ப்ரைடு ரைஸ்** |
| **ராத்திரி?** | - | **பீட்ஸா அல்லது பாஸ்தா** |

இது ஏதோ ஆங்கிலப்படத்தின் வசனம் அல்ல. சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர் என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல் ஒட்டு மொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும் சாம்பார் சாதமும் கத்திரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில் ஆம் காணாமல் போய்விடும் - உங்கள் குழந்தைகள் ஆடு மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும், மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

1. **நாகரிகம் கருதி நம் பாரம்பரிய உணவுகளைத் தவிர்த்தல் கூடாது.**
2. **நம் நாட்டிற்கு புழுங்கல் அரிசியே ஏற்றது.**
3. **பாரம்பரிய உணவுகளைத் தினமும் உணவாக உட்கொள்ள வேண்டும்.**
4. **பாரம்பரிய உணவு மிகுந்த சக்தியைக் கொடுக்கும்.**
5. **பாரம்பரிய உணவு பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.**

| வினா எண்:42 | இயல் - 4 | புத்தக பக்கம்: 98 |
|---|---|---|

தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி, திறன் பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை, காணொலி விளையாட்டுகளில் "மூழ்கியிருக்கும் தோழன், எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி , இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள் ! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.

1. குழு மனப்பான்மையை வளர்க்கும் விளையாட்டுகளில் விளையாடச் செய்யலாம்.
2. கோலி, பம்பரம் போன்ற விளையாட்டுகளை விளையாடச் செய்யலாம்.
3. பெண்கள் பாண்டி, பல்லாங்குழி. கழங்கு முதலிய விளையாட்டுகளை விளையடலாம்.
4. உலக நிகழ்வுகளைக் கலந்துரையாடலாம்.
5. மேற்கண்ட நிகழ்வுகள் அனைத்தும் மனிதர்களுக்கிடையே நடைபெறும் நிகழ்வு.

| வினா எண்: **42** | இயல் - 5 | புத்தக பக்கம்: 126 |
|---|---|---|

| ***பள்ளியில் நான்*** | ***வீட்டில் நான்*** |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன் பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | வீட்டில் பெற்றோர் சொல்படி நடப்பேன். |
| ஆசிரியர்களிடம் பணிவுடன் நடந்து கொள்வேன் | வீட்டுப் பாடங்களை உடனுக்குடன் முடிப்பேன். |
| ஒழுக்கத்திற்கும், கல்விக்கும் முக்கியத்துவம் கொடுப்பேன். | உறவினர்களிடம் அன்பாக நடந்து கொள்வேன். |

| ***வினா எண்:42*** | ***இயல் - 6*** | ***புத்தக பக்கம்: 153*** |
|---|---|---|

***அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது, இன்னொரு புறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள். இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.***

***இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்புவனவற்றை வரிசைப்படுத்துக.***

1. பிறந்தநாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்.
2. எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.
3. கோவில் திருவிழாக்களில் கரகாட்டம், காவடியாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.
4. விடுமுறை காலங்களில் தெருக்கூத்து நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்வேன்
5. விளையாட்டு விழாக்களில் புலியாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்
6. திருமண விழாக்களில் பொய்க்கால் ஆட்டத்தை நடத்துவேன்

| வினா எண்:42 | இயல் - 7 | புத்தக பக்கம்: 182 |
|---|---|---|

***அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம் நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்து இருப்பீர்கள்.இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை. அதுபோலவே கோவில்களிலும் வரலாற்றுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம் பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள் தானே? இவற்றைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்...***

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக்குறைக்கும் படி எதுவும் கூற அனு மதிக்கமாட்டேன். |
| கல்வெட்டுகளைக் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன் | வரலாற்று சாசனம் என்பதை உணரச் செய்வேன், |
| கல்வெட்டின் மூலம் மன்னர்களைப் பின்பற்றி நாட்டுப்பற்றை வளர்க்கலாம் என்பதை உணர்த்துவேன். | கல்வெட்டு கூறும் இலக்கிய, கலை வரலாற்றை மக்கள் அறியச்செய்வேன். |

| வினா எண்:42 | இயல் - 8 | புத்தக பக்கம்: 201 |
|---|---|---|

| **நாம் செய்ய வேண்டுவன (அறங்கள்)** | **அறங்கள் தரும் நன்மைகள்** |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல் | நல்ல நண்பர்களைப் பெறலாம், எதிரியையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல் | தேவையற்ற சண்டையைப் பகையை தவிர்த்து. அனைவருடனும் அன்பாய் வாழலாம். |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல் | மன அமைதி பெறலாம், நண்பரிடத்தும், உறவினரிடத்தும் நற்பெயர் பெறலாம். |
| பொய் தவிர்த்து உண்மை பேசுதல் | உண்மை நம் வாழ்வை உயர்த்தும் அச்சமின்றி வாழலாம். |

| வினா எண்:42 | இயல் - 9 | புத்தக பக்கம்: 229 |
|---|---|---|

| ***உதவி*** | ***மனநிலை*** |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது, | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு அவருக்கு மகிழ்ச்சி |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | |
|---|---|
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவிய போது. | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு |
| பேருந்தில் முதியோருக்குப் பயணச் சீட்டு எடுத்துக்கொடுத்து உதவியபோது | மனநிறைவும். அவரது முகத்தின் அமைதியும். மகிழ்ச்சியும் என்னையும் மகிழச் செய்தது |
| ஒருவேளை உணவு வழங்கிய போது | பசிப்பிணி தீர்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது |

| வினா எண்:43 | **உரைநடை நெடுவினா** | பக்கம்:66,94,198 |
|---|---|---|

1. சங்க இலக்கியத்தில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களை குறிப்பிட்டு அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக.

<u>அறங்கள்</u>:

1. வணிக அறம். ***<u>2. அரசியல் அறம்.</u>***

<u>வணிக அறம்</u> :

- அறம் செய்வதில் வணிக நோக்கம் கூடாது.
- இது தற்காலத்திலும் உள்ளது.
- மின் எடைக்கருவி மூலம் சரியான எடை உள்ளதா? என்று அறிகிறோம்.
- அரசனுக்கு ஆலோசனை கூற அமைச்சர்கள் இருந்தனர்

***<u>2. அரசியல் அறம்.</u>***

- நிர்வாகத்தில் பங்குபெற தற்போது அமைச்சரவை உள்ளது.
- அறங்கூறு அவையங்கள் சங்க காலத்தில் உள்ளன.
- தற்போது அவை நீதிமன்றங்களாக உள்ளன.

2. ***உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.***

1. தமிழரின் சிறந்த பண்புகளில் ஒன்று விருந்தோம்பல்.
2. நானும் அதைக் விரும்பி கடைபிடித்தேன்.
3. என் அத்தையும் மாமாவும் ஒருநாள் காலையில் எங்கள் வீட்டிற்கு வந்தனர்.
4. அவர்களை எனக்கு மிகவும் பிடிக்கும்.
5. முதலில் குடிக்க நீர் கொடுத்தேன்.
6. அவர்களிடம் நலம் விசாரித்தேன்.
7. வாழை இலையில் விருந்து அளித்தேன்.
8. அதிக நேரம் அவர்களுடன் பேசி மகிழ்ந்தேன்.
9. மாலையில் அவர்கள் ஊருக்கு புறப்பட்டனர்.
10. நான் வாசல்வரை சென்று வழி அனுப்பிவைத்தேன்.
11. அந்த இனிய நிகழ்வு என் மனதில் பசுமரத்து ஆணிபோல் பதிந்து விட்டது.

***3. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.***

1. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் நிச்சயம் அக்கறை கொள்ளும்.
2. இந்த தொழில் நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது.
3. பெரிய தொழில் நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன.
4. மனித உயிரை காக்கும்.
5. மனிதர்களுக்கு பாதுகாப்பைத் தருகிறது.
6. உயரமான கட்டிடம் கட்டப் பயன்படுகிறது.
7. ஆட்கள் இல்லாத வணிகம் நடத்த பயன்படுகிறது.
8. கடினமான வேலையைச் செய்கிறது.

***4. கருணையனின் தாய் மறைவுக்கு , வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவகமலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.***

- ❖ மழை இல்லாப் பயிரைப் போல வாடுகிறேன்.
- ❖ மரத்திலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறேன்.
- ❖ அம்பினால் உண்டான புண்ணைப் போலவும்,
- ❖ துணையைப் பிரிந்த பறவையைப் போலவும் வாடுகிறேன்.
- ❖ உய்முறை அறியேன்,
- ❖ மெய்முறை அறியேன்,
- ❖ உணவு செய்முறை அறியேன்

**5.** நிகழ்கலை வடிவங்கள் - அவைநிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றைவளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவைகுறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

1. முன்னுரை:

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக்கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள் ஆகும்.

2. நிகழ்கலைவடிவங்கள்:

ஆடல்கள், பாடல்கள், கதைகள் பழமொழிகள் விடுகதைகள் போன்றவை.

3. நிகழும் இடங்கள்:

தெரு, தெருகோடி, முச்சந்தி

4. ஒப்பனைகள்:

ஆடை, அணிகலன்கள் முக்கிய இடம்பெறும்.

5. சிறப்பும் பழைமையும்:

அனைவராலும் விரும்பப்படும் கலை வாழ்வில் பிரிக்க முடியாத பண்பாட்டு கூறாகும்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

7. கலைகள் அருக காரணங்கள்:

தொழில்நுட்ப வளர்ச்சி, திரைப்படம், தொடர் நாடகம், முக்கிய காரணமாகும்.

8. நாம் செய்ய வேண்டுவன:

கலைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

9. முடிவுரை:

நிகழ்கலைகள் ஊரக மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கின்றன. உழைப்பாளிகளின் உணர்வுகளாக உள்ளன.

| வினா எண்:43 | இயல் - 2 | நயம் பாராட்டல் | புத்தக பக்கம்: 44 |
|---|---|---|---|

*43. **மலர்ந்தும் மலராத பாதிமலர் போல***
***வளரும் விழி வண்ணமே - வந்து***
***விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக***
***விளைந்த கலை அன்னமே***
***நதியில் விளையாடி கொடியில் தலைசீவி***
***நடந்த இளந் தென்றலே - வளர்***
***பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு***
***பொலிந்த தமிழ் மன்றமே***

- ***கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.***

***நயம் பாராட்டல்***

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | மோனை நயம் |
| 3 | எதுகை நயம் |
| 4 | சந்த நயம் |
| 5 | இயைபு நயம் |
| 6 | முரண் நயம் |
| 7 | அணி நயம் |
| 8 | பொருள் நயம் |
| 9 | முடிவுரை |

1. **முன்னுரை :**

கண்ணதாசனின் பாடலில் உள்ள மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம், சந்த நயம், அணி நயம், சுவை நயம் முதலிய நயங்களைப் பற்றி காண்போம்..

2. **மோனை நயம் :**

செய்யுளில் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை நயம்.

வளரும், வண்ணமே

3. **எதுகை நயம்:**

செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை நயம்.

நதியில், பொதிகை

4. **சந்த நயம்:**

**சந்தம் பாட்டுக்குச் சொந்தம்' இப்பாடல் இசையோடு பாடுவதற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது.**

5. **இயைபு நயம்:**

**இறுதி எழுத்தோ, சீரோ, அசையோ ஒன்றி வருதல் இயைபு நயம்.**

வண்ணமே
அன்னமே
மன்றமே

6. **முரண் நயம்:**

மலர்ந்தும் x மலராத
விடிந்தும் x விடியாத

7. **அணி நயம்:**

இப்பாடலில் உவமயணி கூறி செய்யுளுக்கு அழகு சேர்த்து உள்ளார் கவிஞர்.

சான்று: பாதி மலர்போல – உவமையணி

8. **பொருள் நயம்:**

காற்றோடு தமிழையும் சிறப்பித்து நல்ல பொறுள் நயத்தோடு இப்பாடல் எழுதப்பட்டு உள்ளது.

9. **முடிவுரை:**

கண்ணதாசனின் பாடலில் உள்ள மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம், சந்த நயம், அணி நயம், சுவை நயம் முதலிய நயங்களைப் பற்றி கண்டோம்.

| வினா எண்:43 | இயல் - 7 | நயம் பாராட்டல் | புத்தக பக்கம்: 179 |
|---|---|---|---|

**43. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தைவிளக்குக.**

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | மோனை நயம் |
| 3 | எதுகை நயம் |
| 4 | இயைபு நயம் |
| 5 | சந்த நயம் |
| 6 | அணி நயம் |
| 7 | சுவை நயம் |
| 8 | முடிவுரை |

**1.முன்னுரை :**

மெய்க்கீர்த்தி பாடலில் இடம்பெற்றுள்ள மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம், சந்த நயம், அணி நயம், சுவை நயம் முதலிய நயங்களைப் பற்றி காண்போம்.

**2. மோனை நயம் :**

செய்யுளில் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை நயம்.

இயற்புலவரே இசைப் பாணரே

**3. எதுகை நயம்:**

செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை நயம்.

படியானையே , வடிமனிச்சிலம்பே

**4. இயைபு நயம்**

**இறுதி எழுத்தோ, சீரோ, அசையோ ஒன்றி வருதல் இயைபு நயம்.**

கடியவாயின
கொடியவாயின

**5. சந்த நயம்:**

**`சந்தம் பாட்டுக்குச் சொந்தம்' இப்பாடல் இசையோடு பாடுவதற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது.**

**6.அணி நயம்:**

கவிஞர் உள்ளதை உள்ளபடி சொல்லாமல் உயர்வுபட பாடியமையால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**7. சுவை நயம்:**

இப்பாடல் பெருமிதச் சுவை அமையப் பாடப்பட்டது சிறப்புக்குறியது ஆகும்.

**8. முடிவுரை:**

மெய்க்கீர்த்தி பாடலில் இடம்பெற்றுள்ள மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம், சந்த நயம், அணி நயம், சுவை நயம் முதலிய நயங்களைப் பற்றி கண்டோம்.

| வினா எண்:43 | இயல் - 8 | நயம் பாராட்டல் | புத்தக பக்கம்: 198 |
|---|---|---|---|

***43. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.***

***கவிஞன் யானோர் காலக் கணிதம்***
***கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!***
***புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்***
***பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!***
***இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்***
***இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!***
***ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்***
***அவனும் யானுமே அறிந்தவை; அறிக!***
***- கண்ணதாசன்***

## நயம் பாராட்டல்

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | மோனை நயம் |
| 3 | எதுகை நயம் |
| 4 | சந்த நயம் |
| 5 | இயைபு நயம் |
| 6 | முரண் நயம் |
| 7 | அணி நயம் |
| 8 | சுவை நயம் |
| 9 | முடிவுரை |

### 1. முன்னுரை :

காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம், சந்த நயம், அணி நயம், சுவை நயம் முதலிய நயங்களைப் பற்றி காண்போம்.

### 2. . மோனை நயம் :

செய்யுளில் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை நயம்.

இயற்புலவரே
இசைப்புலவரே

### 3. எதுகை நயம்:

செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை நயம்.

கருப்படு உருப்பட

4. சந்த நயம்:

`சந்தம் பாட்டுக்குச் சொந்தம்' இப்பாடல் இசையோடு பாடுவதற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது.

5. இயைபு நயம்

இறுதி எழுத்தோ, சீரோ, அசையோ ஒன்றி வருதல் இயைபு நயம்.

கணிதம்,
செல்வம்,
மூன்றும்

6. முரண் நயம்:

ஆக்கல் x அழித்தல்

7. அணி நயம்:

கவிஞர் உள்ளதை உள்ளபடி சொல்லாமல் உயர்வுபட பாடியமையால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

8. சுவை நயம்:

இப்பாடல் பெருமிதச் சுவை அமையப் பாடப்பட்டது சிறப்புக்குறியது ஆகும்.

9. முடிவுரை :

காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம், சந்த நயம், அணி நயம், சுவை நயம் முதலிய நயங்களைப் பற்றி கண்டோம்.

| வினா எண்: 44 | இயல் - 2 துணைப்பாடக் கட்டுரை | புத்தக பக்கம்: 44 |
|---|---|---|

***1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?***

புயலிலே ஒரு தோணி - ப.சிங்காரம்

| வ.எண் | குறிப்புச் சட்டகம் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | பொருளுரை |
| 3 | வருணனை |
| 4 | அடுக்குத்தொடர் |
| 5 | ஒலிக்குறிப்புச் சொற்கள் |
| 6 | தோணி படும்பாடு |
| 7 | முடிவுரை |

1. முன்னுரை:

புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டைப் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் காண்போம்.

**2. பொருளுரை :**

3. வருணனை :

- ❖ மேகப்பொதிகள் திரண்டன.
- ❖ மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.
- ❖ வானம் பிளந்து தீ கக்கியது.
- ❖ வானம் உடைந்து வெள்ளம் கொட்டியது.

4. அடுக்குத்தொடர்

- ❖ நொறுநொறு
- ❖ நடுநடுங்கி
- ❖ குதிகுதித்து
- ❖ கிறுகிறுத்து
- ❖ கரை! கரை! கரை!

5. ஒலிக்குறிப்புச் சொற்கள்:

- ❖ **கும்மிருட்டு**
- ❖ **குருட்டிருட்டு**
- ❖ **கடலை அடிக்கிறது**
- ❖ **முனகல்**
- ❖ **இடி முழக்கம்**

**6. தோணி படும்பாடு**

- ❖ **இத்தகைய வருணனையும் , அடுக்குத்தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலிலே தோணி படும்பாட்டை `அழகாய் ' விவரிக்கின்றன.**

7. முடிவுரை:

புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டைப் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் கண்டோம்.

***2. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.***

| ***வினா எண்:44*** | ***இயல் - 3 துணைப்பாடக் கட்டுரை*** | ***புத்தக பக்கம்: 66*** |
|---|---|---|

***கோபல்லபுரத்து மக்கள் - கி.ராஜநாராயணன்***

| ***வ.எண்*** | ***குறிப்புச் சட்டகம்*** |
|---|---|
| *1* | ***முன்னுரை*** |
| *2* | ***பொருளுரை*** |
| *3* | ***கிராமத்து மக்கள்*** |
| *4* | ***மரத்தடியில் வாலிபன்*** |
| *5* | ***நீச்சத் தண்ணீர்*** |
| *6* | ***அன்னமிட்ட அன்னமய்யா*** |
| *7* | ***பெயர் பொருத்தம்*** |
| *8* | ***முடிவுரை*** |

**1. முன்னுரை:**

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதையின் மூலம் இக்கட்டுரையில் **சுருக்கமாகவும் தெளிவாகவும் காண்போம்.**

**2. பொருளுரை:**

***3. கிராமத்து மக்கள்:***

- கிராமத்து மக்கள் பகிர்ந்து உண்பவர்கள்.
- அன்பு மிகுந்தவர்கள்.
- கிராமத்து விருந்து பாரம்பரிய சுவை உடையது.

***4. மரத்தடியில் வாலிபன்:***

- சாலையோரம் இருந்த சுப்பையாவின் புஞ்சையில் அருகு எடுத்தனர்.
- கஞ்சி குடிக்க உட்காரும் பொழுது மரத்தடியில் பசியால் வாடிய வாலிபன் இருந்தான்.

***5. நீச்சத் தண்ணீர்:***

- அன்னமய்யாவைப் பார்த்து அவ்வாலிபன் மென்மையாக சிரித்தான்.
- குடிக்க தண்ணீர் கேட்டான்.
- அன்னமய்யா நீச்சத் தண்ணியைக் கொடுத்தான்.

***6. அன்னமிட்ட அன்னமய்யா:***

- வேப்ப மரத்தின் அடியில் இருந்த கஞ்சி கலயத்தையும், மோர் மிளகாயும் கொடுத்தான்.
- அடுத்த புஞ்சைக்கு அழைத்துச் சென்றான்.
- வட்டமாக உட்கார்ந்து கம்மஞ்சோறு உண்டனர்.

***7. பெயர் பொருத்தம்:***

- அன்னமய்யா என்ற பெயருக்கு ஏற்ப அன்னமிட்டு மனித நேயம் காத்த அன்னமையாவின் பெயர் அவனுக்கே பொருத்தம் உடையாதாக அமைகின்றது.

**8. முடிவுரை:**

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதையின் மூலம் இக்கட்டுரையில் **சுருக்கமாகவும் தெளிவாகவும் கண்டோம்.**


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| வினா எண்:44 | இயல் - 5 துணைப்பாடக் கட்டுரை | புத்தக பக்கம்: 122 |
|---|---|---|

1. `கற்கை நன்றே கற்கை நன்றே' பிச்சைபுகினும் கற்கை நன்றே'- என்கிறது வெற்றிவேற்கை மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப்பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

**புதிய நம்பிக்கை - கமலாலயன்**

| வ.எண் | குறிப்புச் சட்டகம் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | பொருளுரை |
| 3 | பருத்திக்காட்டில் மேரி |
| 4 | வெள்ளைக்காரச் சிறுமியின் செயல் |
| 5 | மேரியின் வருத்தம் |
| 6 | தனியாத தாகம் |
| 7 | வாய்ப்பு வந்தது |
| 8 | புதிய நம்பிக்கை |
| 9 | முடிவுரை |

**1. முன்னுரை:**

மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப்பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் காண்போம்.

**2. பொருளுரை:**

**3. பருத்திக்காட்டில் மேரி**

- மேரி கருப்பர் இனத்தைச் சார்ந்தவர்.
- மிகவும் விதியாசமான பெண்.
- பருத்திச் செடிகளை மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்வாள்.
- அதில் பூக்கும் பூவை பார்க்கிற முதல் ஆளாக இருப்பாள்.

**4. வெள்ளைக்காரச் சிறுமியின் செயல்:**

- வெள்ளைக்காரச் சிறுமி விளையாடும் இடத்திற்கு மேரி சென்றாள்.
- வீட்டிற்குள் சென்ற மேரி அங்கிருந்த புத்தகத்தை எடுத்தாள்.
- வெள்ளைக்கார சிறுமி "புத்தகத்தை என்னிடம் கொடு" உன்னால் படிக்க முடியாது என்று புத்தகத்தைப் பிடுங்கினாள்.

**5. மேரியின் வருத்தம்:**

வெள்ளைக்கார சிறுமி கூறியதைக் கேட்ட மேரி தனக்குப் படிக்கத் தெரியவில்லையே என்று வருத்தம் அடைந்தாள்.

6. **தன்யாத தாகம்:**

- படிக்க வேண்டும் என்ற தாகம் அவளின் உள்ளத்தில் எழுகிறது.
- தன் தந்தையிடம் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று கூறுகின்றாள்.

7. **வாய்ப்பு வந்தது:**

- **வில்சன் மேரியைப் பார்த்து வேலையை விரைவாக முடித்துவிட்டு படிக்க வா என்றார்.**
- **மேரி ஆர்வமுடன் படிக்கத் தொடங்கினாள்.**

8. **புதிய நம்பிக்கை:**

- **மேரி புதிது புதிதாக கற்றாள்.**
- **தன் வாழ்க்கை உயர்வதை உணர்ந்தாள்.**
- **டிப்ளமோ பட்டம் பெற்றாள்.**
- **கருப்பர் இன குழந்தைகள் படிக்க ஒரு பள்ளியை கட்டினாள்.**

9. **முடிவுரை:**

***மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப்பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் கண்டோம்.***

| வினா எண்:44 | இயல் - 7 துணைப்பாடக் கட்டுரை | புத்தக பக்கம்: 178 |
|---|---|---|

***மகளிர் நாள்விழா***

***இடம் - பள்ளிக் கலையரங்கம்*** ***நாள் - 08.03.2019***

***கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை மாணவத் தலைவரின் நன்றியுரை.***

***மகளிர் நாள்விழா***

***எம்பள்ளி கலையரங்கில் 08-03-2020 அன்று மகளிர் நாள்விழா நடைபெற்றது. அவ்விழாவினைப் பற்றிய அறிக்கையாவது.***

***இடம் : பள்ளிக்கலையரங்கம்*** ***விழா நாள்: 08-03-2020***

***மாணவர், ஆசிரியர் கூடுதல்:***

எம்பள்ளி அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. விழாவிற்கு இருபால் ஆசிரியர்களும், மாணவர்களும், சிறப்பு விருந்தினர்களும் வந்தனர். மாலை 3.00 மணியளவில் பள்ளி கலையரங்கில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது.

www.Padasalai.Net www.CBSEtips.in

### ***தலைமையாசிரியரின் வரவேற்பு:***

விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் தலைமையாசிரியர் வரவேற்றார்.

### ***இதழாளர் கலையரசியின் சிறப்புரை:***

இதழாளர் கலையரசி அவர்கள் பெண்கல்வியின் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு சிறப்புரை ஆற்றினார்.

### ***ஆசிரியர்களின் வாழ்த்துரை:***

எம்பள்ளியில் பணிபுரியும் இருபால் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு மகளிர் நாள் விழா வாழ்த்துக்களை கூறினார்கள்.

### ***மாணவத் தலைவரின் நன்றியுரை:***

பள்ளி மாணவத்தலைவன் அனைவருக்கும் நன்றி கூறினான். இறுதியில் நாடுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

| வினா எண்:44 | இயல் - 9 துணைப்பாடக் கட்டுரை | புத்தக பக்கம்: 224 |
|---|---|---|

3. அழகிரிசாமியின் ஒருவன் இருக்கின்றான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

## ஒருவன் இருக்கின்றான் - கு.அழகிரிசாமி

| வ.எண் | குறிப்புச் சட்டகம் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | பொருளுரை |
| 3 | குப்புசாமியின் குடும்பம் |
| 4 | விறகு கடை வீரப்பன் |
| 5 | வீரப்பனின் கடிதம் |
| 6 | மனித நேயம் |
| 7 | முடிவுரை |

### ***1. முன்னுரை:***

அழகிரிசாமியின் ஒருவன் இருக்கின்றான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் வீரப்பனைப் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் காண்போம்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**2. பொருளுரை:**

**3. குப்புசாமியின் குடும்பம்:**

குப்புசாமிக்கு தாய் தகப்பன் கிடையாது. உறவுகள் இருந்தாலும் அவனைப் பார்த்துக்கொள்ள ஆளில்லை. அனாதையாகி விட்டான்.

**4. விறகுகடை வீரப்பன்:**

குப்புசாமி வேலை செய்து வந்த சைக்கிள் கடைக்கு எதிரே உள்ள விறகுகடையில் வீரப்பனும் வேலை செய்து வந்தான். இருவரும் நெருங்கிய நண்பர்கள்.

**5. வீரப்பனின் கடிதம்:**

ஒருநாள் வீரப்பன் குப்புசாமிக்கு "மூன்று ரூபாயும் ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினான். அந்த கடிதத்தில், என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு எழுதிக் கொண்டது. நீ இங்கிருந்து போனதிலிருந்து என் உயிர் இங்கே இல்லை. சதா உன் ஞாபகம்தான். கடவுள் அருளால் நீ சவுக்கியமாகி வரவேண்டும். உனக்காக நான் தினமும் கோவிலுக்குப் போய் சாமி கும்பிடுகிறேன்.

**6. மனித நேயம்:**

உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் உயிரையே வைத்து வறுமையிலும் உதவும் மனப்பான்மை, சம்பளமே இல்லாதபொழுது கடன்வாங்கி உதவும் கருணை, உறவினரால் ஒதுக்கப்பட்ட பொழுதும் உயிர் நண்பனாக விளங்கிய வீரப்பனை அழகிரிசாமி சிறந்த மனித நேயம் கொண்ட கதை மாந்தராக படைத்துள்ளார்.

**7. முடிவுரை:**

அழகிரிசாமியின் ஒருவன் இருக்கின்றான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் வீரப்பனைப் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் கண்டோம்.

## கட்டுரை / மதிப்புரை / வாழ்த்துரை / நன்றியுரை எழுதுதல்

| வினா எண்:45 | இயல் - 1 | புத்தக பக்கம்: 22 |
|---|---|---|

***45. முன்னுரை - தமிழின் தொன்மை - ஜி.யு.போப்பின் தமிழ்ப்பணி - வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி - ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி - நான்காம் தமிழ்ச்சங்கம் - உலகத்தமிழ் மாநாடு - முடிவுரை***

## சான்றோர் வளர்த்த தமிழ்

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| அ | முன்னுரை |
| ஆ | பொருளுரை |
| இ | மேற்கோள் |
| 1 | தமிழின் தொன்மை |
| 2 | ஜி.யு.போப்பின் தமிழ்ப்பணி |
| 3 | வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி |
| 4 | ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி |
| 5 | நான்காம் தமிழ்ச்சங்கம் |
| 6 | உலகத்தமிழ் மாநாடு |
| ஈ | முடிவுரை |

**அ. முன்னுரை:**

சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் கட்டுரையில் உள்ள தமிழின் தொன்மை, ஜி.யு.போப்பின் தமிழ்ப்பணி, வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி , ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி, நான்காம் தமிழ்ச்சங்கம், உலகத்தமிழ் மாநாடு செய்திகளைப் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் இக்கட்டுரையில் காண்போம்.

**ஆ. பொருளுரை:**

**இ. மேற்கோள்:**

> "கல்தோன்றி மண்தோன்றாக்
> காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்"
> புறப்பொருள் வெண்பாமாலை

**1. தமிழின் தொன்மை:**

தமிழின் தொன்மையைக் கருதி என்றுமுள தென்தமிழ்" என்பார் கம்பர். உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி என்றார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

**2. ஜி.யு.போப்பின் தமிழ்ப்பணி:**

திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தார். ஆங்கில மொழியை அன்னை மொழியாகக் கொண்ட போப் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் : என தனது கல்லறையில் எழுதுமாறு கூறினார்.

**3. வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி:**

இத்தாலி நாட்டில் பிறந்த வீரமாமுனிவர் தமிழகம் வந்து தமிழைக் கற்றார். இவர் தமிழில் முதன்முதலாக சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டார்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**4. ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி:**

இவரை வசனநடை கைவந்த வல்லாளர் எனப் பரிதிமாற் கலைஞர் பாராட்டியுள்ளார். ஆறுமுக நாவலர் சென்னையில் அச்சுக்கூடம் அமைத்து சிறந்த தமிழ் நூல்களைப் பதிப்பித்து அனைவரும் தமிழைச் சுவைக்கச் செய்தார்.

**5. நான்காம் தமிழ்ச்சங்கம்:**

பாசுகர சேதுபதி தலைமையில் பாண்டித்துரை மேற்பார்வையில் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை அமைத்துத் தமிழை வளர்த்தனர் தமிழர்.

**6. உலகத்தமிழ் மாநாடு:**

உலகிலேயே மொழிக்காக, முதன்முதலில் மாநாடு நடத்திய நாடு மலேசியா, அதுவும் தமிழ்மொழிக்காக நடைபெற்றது.

**ஈ. முடிவுரை:**

"சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் கட்டுரையில் உள்ள தமிழின் தொன்மை, ஜி.யு.போப்பின் தமிழ்ப்பணி , வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி , ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி, நான்காம் தமிழ்ச்சங்கம், உலகத்தமிழ் மாநாடு செய்திகளைப் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் இக்கட்டுரையில் கண்டோம்.

| | | |
|---|---|---|
| வினா எண்:45 | இயல் - 4 | புத்தக பக்கம்: 96 |

**45. முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.**

**விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்**

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| அ | முன்னுரை |
| ஆ | பொருளுரை |
| இ | மேற்கோள் |
| 1 | விண்வெளியில் தமிழரின் அறிவு |
| 2 | கல்பனா சாவ்லா |
| 3 | விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை |
| ஈ | முடிவுரை |

**அ. முன்னுரை:**

***விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்*** என்னும் தலைப்பில் உள்ள விண்வெளியில் தமிழரின் அறிவு, கல்பனா சாவ்லா, விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை போன்ற செய்திகளைப் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் இக்கட்டுரையில் காண்போம்.

**ஆ. பொருளுரை:**

**இ. மேற்கோள்:**

> **வானை அளப்போம் - கடல்**
> **மீனை அளப்போம்**
> **சந்திர மண்டலத்தியல்**
> **கண்டு தெளிவோம்**
> **- பாரதியார்**

**1. விண்வெளியில் தமிழரின் அறிவு:**

சங்கத் தமிழர்கள் வான் கோள்களில் தாமே ஒளிவிடக் கூடியவற்றையும் சூரியனிடம் இருந்து கடன் பெற்று ஒளிவிடுவனவற்றையும் கண்டறிந்து நாள் மீன்கள் கோள் மீன்கள் என்று பெயர் சூட்டி அழைத்தனர்.

**2. கல்பனா சாவ்லா:**

16-01 -2003ல் அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் - 107 (STS - 107) விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த விண்கலத்தில் சாவ்லா உட்பட ஏழு பேர் பயணித்தனர். பதினாறு நாட்கள் ஆய்வை முடித்துவிட்டு திரும்பிய போது. அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான் பரப்பில் அவ்விண்கலம் வெடித்துச் சிதறியது. சாவ்லா உட்பட ஏழு பேரும் பலியாகினர்.

**3. விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை:**

நாம் எப்படி உருவானோம்? நம்மை வழி நடத்துவது எவை? சுற்றும் பூமிக்கும் சுட்டெரிக்கும் சூரியனுக்கும் அடிப்படை எது? நம்முடைய பூமியும், இந்தப் பிரபஞ்சமும் எப்போது செயலிழந்து போகும்? நமக்குள் இருக்கும் உயிருக்கும் இயற்கை சக்திகளுக்கும் ஆதாரம் எங்கே ஒளிந்திருக்கிறது? கம்ப்யூட்டர் அறிவு மனித அறிவை மிஞ்சிவிடுமா? இப்படிச் சிந்தனைக்குரிய கேள்விகளுக்கு விடை தருவதாய் இருக்க வேண்டும்.

**ஈ). முடிவுரை:**

விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் என்னும் தலைப்பில் உள்ள விண்வெளியில் தமிழரின் அறிவு, கல்பனா சாவ்லா , விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை போன்ற செய்திகளைப் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் இக்கட்டுரையில் கண்டோம்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| வினா எண்:45 | இயல் - 5 | புத்தக பக்கம்: 124 |
|---|---|---|

**45. பள்ளி ஆண்டு விழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.**

**மதிப்புரை எழுதுதல்**

**வீரமாமுனிவர் - பரமார்த்தகுரு கதை**

| குறிப்புச் சட்டகம் | |
|---|---|
| 1 | நூலின் தலைப்பு |
| 2 | நூலின் மையப் பொருள் |
| 3 | மொழி நடை |
| 4 | வெளிப்படுத்தும் கருத்து |
| 5 | நூலின் நயம் |
| 6 | நூலின் கட்டமைப்பு |
| 7 | சிறப்புக்கூறு |

**1. நூலின் தலைப்பு**

மதிப்புரை எழுதுவதற்கு எடுத்துக் கொண்ட நூலின் தலைப்பு பரமார்த்தகுரு கதை.

**2. நூலின் மையப்பொருள்**

ஐந்து சீடர்கள் குருவிடம் வைத்துள்ள முரட்டு பக்தியை கதையாக வைத்திருப்பதும், விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்பதையும் மையப்பொருளாக கொண்டுள்ளது பரமார்த்த குருகதை.

**3. மொழிநடை**

பாமரனுக்கும் புரிகின்ற நகைச்சுவை கலந்த எளிய மொழி நடையே இச்சிறுகதையில் கையாளப்பட்டுள்ளது.

**4. வெளிப்படுத்தும் கருத்து**

மூடநம்பிக்கை இன்றி அறிவால் பகுத்துப்பார்த்துச் செயல்களைச் செய்ய வேண்டும் என்பதே இக்கதை வெளிப்படுத்தும் கருத்தாகும்.

**5. நூலின் நயம்**

பொதுவாகவே இந்நூலில் விழிப்புணர்வை மையப்படுத்தி நூலின் நயங்கள் வெளிப்படுத்துகின்றன.

**6. நூலின் கட்டமைப்பு**

குழந்தைகள் விருப்பத்துடன் வாசிப்பதற்கு ஏற்ற சிறுகதை பரமார்த்த குரு கதையாகும்.


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**7. சிறப்புக்கூறு**

வீரமாமுனிவர் இந்நூலைத் தரமான சொற்களால் கையாண்டிருப்பது தமிழுக்கு அழகு சேர்க்கிறது.

**8. நூல் ஆசிரியர்**

நகைச் சுவை நிரம்பிய "பரமார்த்த குரு கதை" என்னும் நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர் ஆவார்.

| வினா எண்:45 | இயல் - 6 | புத்தக பக்கம்: 151 |
|---|---|---|

**45. உங்கள் பகுதியில் நடை பெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.**

**அரசு பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வு**

| குறிப்புச் சட்டகம் | |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | பொருளுரை |
| 3 | பொருட்காட்சியின் நோக்கம் |
| 4 | நுழைவுச் சீட்டு |
| 5 | பல்துறை கண்காட்சி அரங்கங்கள் |
| 6 | அங்காடிகள் |
| 7 | பொழுதுபோக்கு அம்சங்கள் |
| 8 | முடிவுரை |

**1. முன்னுரை:**

அரசு பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வு என்னும் தலைப்பில் உள்ள பொருட்காட்சியின் நோக்கம், நுழைவுச் சீட்டு, பல்துறை கண்காட்சி அரங்கங்கள், அங்காடிகள், பொழுதுபோக்கு அம்சங்கள் போன்ற செய்திகளைப் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் இக்கட்டுரையில் காண்போம்.

**2. பொருளுரை:**

**3. பொருட்காட்சியின் நோக்கம்:**

அரசு பொருட்காட்சியின் நோக்கமாக விளங்குவது மக்களுக்குப் பொழுதுபோக்கு அம்சங்களுடன் விழிப்புணர்வு, செயல்திட்டங்கள், தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றை எடுத்துக்கூறுவதே ஆகும்.

www.Padasalai.Net www.CBSEtips.in

***4. நுழைவுச் சீட்டு:***

பொருட்காட்சி நடைபெறும் இடத்தின் உள்ளே செல்ல நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டது, நாங்கள் நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொண்டு உள்ளே சென்றோம்.

***5. பல்துறை கண்காட்சி அரங்கங்கள்:***

காவல் துறை, பொதுப்பணித் துறை, மீன் வளத்துறை, வேளாண் துறை போன்று பல்வேறு துறை சார்ந்த அரங்கங்களின் உள்ளே சென்று அரிய பல தகவல்களை அறிந்து கொண்டேன்.

***6. அங்காடிகள்:***

வீட்டு உபயோகப் பொருட்கள். விளையாட்டுப் பொருட்கள். அலங்காரப் பொருட்கள் என பல்வேறு பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கிக் கொள்ளும் அளவுக்கு பல்வேறு அங்காடிகள் இருந்தன.

***7. பொழுதுபோக்கு அம்சங்கள்:***

பேய்வீடு , பாதாள கிணறு, முப்பரிமாண திரையரங்கம், மீன்காட்சி சாலை, பனிவீடு என பல்வேறு அரங்கங்கள் இருந்தன.

***8. முடிவுரை***

அரசு பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வு என்னும் தலைப்பில் உள்ள **பொருட்காட்சியின் நோக்கம், நுழைவுச் சீட்டு,** பல்துறை கண்காட்சி அரங்கங்கள், அங்காடிகள், பொழுதுபோக்கு அம்சங்கள் போன்ற செய்திகளைப் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் இக்கட்டுரையில் ***கண்டோம்***.

| | | |
|---|---|---|
| ***வினா எண்:45*** | ***இயல் - 9*** | ***புத்தக பக்கம்: 225*** |

***45. உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.***

**வாழ்த்துரை**

**நாட்டிற்காகவும் சமூக நலப் பணிக்காகவும் தியாகம் செய்ய நாட்டு நலப்பணித்திட்ட முகாமில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு முதற்கண் என் வாழ்த்துகளை வழங்கி உரையைத் தொடங்குகிறேன்.**

**நாட்டு நலப்பணித் திட்டம் என்பது நாம் வாழும் இடத்தையும் சுற்றுச்சூழலையும் தூய்மையாகவும் சுகாதாரத்தோடும் வைத்துக்கொள்ள அறிவுறுத்துகிறது.**

**இதன் மூலம் மாணவர்களுக்கு நாட்டுப்பற்று, சமூக அக்கறை தொண்டுள்ளம் போன்ற நற்பண்புகள் வளருகின்றன.**


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**இந்த ஊருக்குத் தேவையான அடிப்படை வசதிகளை இந்த ஒரு வாரத்தில் நீங்கள் அமைத்துத்தர உள்ளீர்கள். இது ஒரு மகத்தான சேவை. இந்த முகாம் முடியும்போது நீங்கள் மனிதநேயம் மிக்கவர்களாய் இருப்பீர்கள் என்பது உறுதி.**

**எந்தவித பலனையும் எதிர்பாராமல் களம் கண்ட இளம் காளையரே! உடல் தளராது உள்ளமும் சுருங்காது சுறுசுறுப்பாய் பணி செய்ய வாழ்த்துகிறேன்.**

**நன்றி!**

| ***வினா எண்:45*** | ***இயல் - 9*** | ***புத்தக பக்கம்: 228*** |
|---|---|---|

45. **பள்ளி வளாகத்தில் நடைப்பெற்ற மரம் நடு விழாவுக்கு வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றியுரை.**

***<u>நன்றியுரை</u>***

எம் பள்ளியின் பசுமைப் பாதுகாப்பு படையின் சார்பாக கொண்டாடிக் கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி!

எம் அழைப்பிற்கிணங்க, பல அலுவல்களுக்கு மத்தியிலும் தன் நேரத்தை எங்களுக்காக ஒதுக்கித்தந்து. இவ்விழாவை சிறப்பு செய்து கொண்டிருக்கும் வனச்சரக அலுவலர் அவர்களுக்கு எம் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அதுமட்டுமின்றி, மரம் நடுவதற்குத் தேவையான மரக்கன்றுகளைத் தந்து உதவியதற்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாவைச் சிறப்பிக்க வருகை தந்திருக்கும் பெற்றோர்களுக்கும், எம்மை ஊக்குவித்த தலைமை ஆசிரியர்க்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் அமைதி காத்த நண்பர்களுக்கும் எம்பசுமைப் பாதுகாப்புப்படை சார்பாக நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன்.

***இயற்கையை நேசிப்போம் !***
***மரங்களைப் பாதுகாப்போம் !***
***நன்றி! வணக்கம்!***

***தன்னம்பிக்கை + விடாமுயற்சி + தொடர்பயிற்சி = வெற்றி நிச்சயம்***